உ

வயிரவர் துணை



தெல்லிப்பழை - மகாதனை

# நரசிங்க வயிரவர் ஆலயம்

19 ஆவது வெளியீடு

பாலர் ஞானோதயசபை

காசி விநாயகர் தேவஸ்தானம்

தெல்லிப்பழை.

7 - 2 - 1992

உ
வயிரவர் துணை

தெல்லிப்பழை - மகாதனை

# நரசிங்க வயிரவர் ஆலயம்

(மேற்படி ஆலயம் பற்றிய வரலாற்றுக் குறிப்பு)

எழுதியவர்:
மேற்படி ஆலயத்தின் ஆதீனகர்த்தா
**சிவஸ்ரீ சி. கணேசலிங்கக் குருக்கள் அவர்கள்**

வெளியீடு:

**பாலர் ஞானோதய சபையின்
பத்தொன்பதாவது வெளியீடு**

பிரசோற்பத்தி தை மீ 24
7—2—1992

விலை ரூபா 20/=

உ

வயிரவர் துணை

# அறிமுகம்

வைரவக்கடவுள்

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

எமது காசிவிநாயகர் தேவஸ்தானத்தைப்பற்றிய தொகுப்பு நூல் ஒன்றை இவ்வாண்டு வெளியீடு செய்கின்றோம். இத் தருணத்தில் மகாதனை நரசிங்க வயிரவர் ஆலயத்தைப்பற்றியும் நாம் அறிந்த செய்திகளை உள்ளடக்கிய சிறிய நூலை வெளியிட விரும்பினேன். இந் நூல் இனிமேல் வரும் சந்ததியினர் ஆலயத்தைப் பற்றிய தகவல்களை அறிய வகைசெய்யும் என்பது எமது நோக்கம். இதற்கு மேற்படி கிராம மக்கள் பூரண விருப்பம் தெரிவித்தார்கள். இந் நூலில் வயிரவப் பெருமானது திருஊஞ்சற் பாக்களும் இடம் பெற்றுள்ளன.

வயிரவப் பெருமானை வழிபடும் அடியார்கள் அனைவரும் இந்த நூலை வரவேற்று வாங்கிப் படித்துப் பயன் பெறுவார்களாக.

சி. கணேசலிங்கக் குருக்கள்.

07 - 02 - 1992.

உ

வயிரவர் துணை

தெல்லிப்பழை - மகாதனை



# நரசிங்க வயிரவர்

௨

## வரலாற்றுச் சுருக்கம்

தெல்லிப்பழை – துர்க்காதேவி ஆலயத்துக்கும், காசிவிநாயகர் ஆலயத்துக்கும் நடுவே பிரதான வீதியிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் ஒழுங்கையால் நானூறு மீற்றர் தூரம் வரை செல்லும் போது மகாதனை என்னும் சிறிய கிராமம் காணப்படுகின்றது. இக் கிராமத்தின் நடுப்பகுதியில் கோணசீமா என்னும் காணிக் குள் இந்த நரசிங்க வயிரவர் ஆலயம் அமைந்திருக்கிறது. நரசிங்கர் என்னும் பெரியார் இவ்வாலயத்தை உருவாக்கியதாகக் கூறப்படு கின்றது. மேற்படி ஆலயம் ஒரு நூற்றாண்டிற்கு முன்பே ஸ்தா பிக்கப்பட்டிருக்கலாம் என்பதை நாம் ஊகிக்கமுடிகின்றது. சென்ற ஐம்பது ஆண்டு காலப் பகுதியை நோக்கும் போது இந்த ஆலயத் தில் தாமிரத்தினல் செய்யப்பட்ட வயிரவர் சூலம் ஒன்றும், கருங் கல்லினல் உருவாக்கப்பட்ட விநாயகர் நாகதம்பிரான் ஆகிய இரு சிலைகளுமே காணப்பட்டன.

மகாதனைக் கிராமத்தில் சிறந்த கல்விமான்களும் அரசாங்க உத்தியோகஸ்தர்களும் பண்டைக் காலத்தில் வாழ்ந்து வந்துள் ளார்கள். இக்காலத்திலும் அத்தகையோர் வாழ்ந்து வருகின்றார் கள். இக்கிராம மக்களின் பிரதான தொழில் விவசாயமாகவே விளங்குகின்றது. ஆதியில் முப்பது குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்து வந்தார்கள். இன்று ஐம்பதிற்கும் மேற்பட்ட குடும்ப அங்கத்தவர்கள் வசிக்கின்றார்கள். இக்கிராமத்தைச் சேர்ந்தவர்கள் வேறு இடங்களிலும் வசிக்கின்றார்கள். இவர்கள் அனைவரும் வயிரவப் பெருமானிடம் மிகுந்த பக்தி பூண்டவர்கள். எந்தக் காரியத்தை ஆரம்பிக்கும் போதும் வயிரவப் பெருமானை வழிபட்டே தொடங்குவார்கள். இதற்கு உதாரணமாக நாற்பது ஆண்டு காலப்பகுதிக்கு முன்னர் இடம் பெற்று வந்த ஒரு நிகழ்ச்சியை யாம் இங்கு குறிப்பிடுகின்றோம். அன்று இக்கிராமத்தில் வசிக்கும் பெண்கள் மகப்பேற்றிற்காக வைத்தியசாலை செல்வது கிடையாது.

பிரசவ வேதனை தொடங்கியதும் வயிரவப் பெருமானை நேர்த்தி செய்து சிதறு தேங்காய் அடித்ததும் குழந்தை பிறந்து விடும். இதில் ஏதாவது தாமதம் ஏற்படுமாயின் தென்மேற்கு மூலையில் இரண்டாவது சிதறு தேங்காய் அடித்ததும் சுகப் பிரசவம் நிகழும். இவையாவும் நாளடைவில் கைவிடப்பட்டு விட்டன.

நரசிங்க வயிரவர் ஆலயத்தின் ஆரம்ப காலப் பூசகராகவும் ஆதீன கர்த்தராகவும் விளங்கிய சிவஸ்ரீ இ. முத்துக்குமாரசாமிக் குருக்கள் (எமது பேரனார்) அவர்களே முதலாவது மகாகும்பாபிஷேகத்தை நிகழ்த்தியதாக அறியப்படுகின்றது. இதன் பின்னர் 1944 — 45 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கட்டிடங்கள் யாவும் பழுதடைந்த நிலையில் காணப்பட்டது. மேற்படி கிராம மக்கள் ஓர் சங்கம் அமைத்து அதன்மூலம் நிதி திரட்டி ஆதி மூலம் அர்த்த மண்டபம் ஆகியவற்றைக் கட்டினார்கள். இதன் பின்னர் இரண்டாவது மகாகும்பாபிஷேகம் 7-4-1947 இல் சிவஸ்ரீ மு. சிவகடாட்க்ஷக் குருக்கள் (எமது தந்தையார்) அவர்கள் தலைமையில் ஊரெழுப் பதியைச் சார்ந்த சிவஸ்ரீ முருகையாக் குருக்கள் அவர்களால் நடாத்தப்பட்டது. பின்னர் பொதுமக்களின் நிதியத்தைக்கொண்டு மகா மண்டபம், தரிசன மண்டபம் ஆகியவை கட்டப்பட்டது.

1983 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கட்டிடங்கள் மீண்டும் புனரமைப்புச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. மேலும் இக் கிராம மக்கள் திருப்பணி நிர்வாகம் ஒன்றைப் பொதுக் கூட்டத்தின் மூலம் தெரிவு செய்தார்கள். இவர்கள் பெரு நிதியத்தைத் திரட்டி முக்கியமான மண்டபங்களை ஆகம விதிக்கு அமையக் கட்டுவித்தார்கள். விநாயகர், முருகன், நாகதம்பிரான் ஆகிய மூர்த்திகளுக்கும் தனிக் கோயில்கள் அமைக்கப்பட்டன. இத் திருப்பணிகள் நிறைவேறியதும் 9 – 6 – 85 இல் மூன்றாவது மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இக் கும்பாபிஷேகத்தை யாமே பிரதம குருவாக இருந்து நிறைவு செய்தோம். கும்பாபிஷேகத்திற்குரிய நிதியத்தையும் திருப்பணி நிர்வாகத்தினரே சேர்த்துக் கொடுத்தார்கள். பஞ்சகுண்டம் அமைக்கப்பட்டது. ஐந்து சிவாச்சாரியர்கள் பங்கு கொண்டு அதி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து ஸ்நபன அபிஷேகம், உற்ஸவம் என்பன பன்னிரு தினங்களுக்கு இடம்பெற்றன. நாற்பத்தைந்து நாட்களுக்கு (மண்டல பூர்த்தி) அபிஷேக ஆராதனைகள் நடாத்தப்பட்டன. மூன்று ஆண்டுகளுக்கு அலங்கார உற்ஸவம் அதற்குரிய உபயகாரர்களது செலவில் செய்யப்பட்டது. 1986 ஆம்

ஆண்டு காலப் பகுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் திருப்பணி நிர்வாகம் மாற்றப்பட்டது. இந்தக் குழுவினர் ஸ்தம்ப மண்டபம் எனப்படும் ஐந்தாவது மண்டபத்தைக் கட்டிப் பூர்த்தி செய்வித்தார்கள். 1987 ஆம் ஆண்டிலே இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் முன்னைய தலைவரையே தலைவராகக்கொண்ட திருப்பணி நிர்வாகக் குழுவினர் தெரிவானார்கள். இவர்கள் மணிக் கோபுரத் திருப்பணியை நிறைவேற்றி, அதற்குக் கும்பாபிஷேகமும் நடைபெற வகை செய்தார்கள்.

மிகவும் பழமை வாய்ந்த இந்த நரசிங்க வயிரவர் ஆலயம் தெய்வீகம் நிறைந்தது. வயிரவப் பெருமான் ஓர் அருள் மூர்த்தம். ஆதிகாலத்தில் வாழ்ந்த இக்கிராம மக்கள் கோவில் இருக்கும் காணியைத் தரும சாதனம் செய்து எமது பேரனாரிடம் (இ. முத்துக் குமாரசாமிக் குருக்கள்) கையளித்ததாகச் சாசனங்கள் மூலம் அறிய முடிகின்றது. ஏறக்குறைய ஐம்பது ஆண்டு காலம் இந்த வயிரவப் பெருமானுக்குப் பூசை செய்யும் பேறு எமக்குக் கிடைத்துள்ளது. 1970 ஆம் ஆண்டு வரை எமது தந்தையார் (மு சிவ கடாக்ஷக் குருக்கள்) ஆதீன கர்த்தராக இருந்தார். அவர் சிவபதம் அடைந்ததும் அந்தப் பொறுப்பு எம்மிடமே ஒப்படைக்கப்பட்டது. தற்பொழுது முன்னர் பழுதடைந்த நிலையில் இருந்த கிணறு புதுக்கி அமைக்கப்பட்டுப் பாவிக்கப்படுகின்றது. மேலும் திருமஞ்சனக் கிணறு தோண்ட வேண்டியது அவசியமாகின்றது. அத்துடன் புதிதாக மடப்பள்ளி, வசந்த மண்டபம் ஆகியவை அமைக்க வேண்டியுள்ளன.

மகாதனையில் வசிக்கும் சைவ மக்கள் ஒன்றுகூடி ஆலயம் சிறப்படைய வகை செய்ய வேண்டும். இக் கிராமத்தில் வசிக்கும் இளைஞர்கள் வாலிப சங்க மூலம் ஆலயத்துக்கு வேண்டிய திருப்பணிகளை நிறைவு செய்ய வேண்டும். வயிரவப்பெருமான் அனைவருக்கும் எல்லா நலன்களையும் அருளவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

உ

சிவமயம்

தெல்லிப்பழை - மகாதனைக்

# கோணசீமா நரசிங்க வயிரவர்

# திருவூஞ்சல்

## காப்பு

சொல்ல வரும் ஓங்கார சொரூபியாகிச்
சுகானந்த மதமாரி சொரிந்து நின்று
அல்லலுறும் அன்பரிடம் அகற்றி யாளும்
ஐங்கரனுர் பொற்பாதத் தன்பு செய்து
தெல்லி மகாதனை கோண சீமாமேய
தெய்வ நரசிங்க வைரவர் மேலூஞ்சல்
எல்லவரும் இசைபாடி இனிதி னேத்தி
இகபர வாழ்வெலா மெய்த ஏத்துவாமே.

## நூல்

மிகு நாத வட்டமதே விட்டமாக
விளங்கு கதிர் இரண்டுமிரு வளையமாக
தகு நேமிவரை ஒருபால் தூணமாக
தக்கமறை சங்கிலியா வுயிரின் கூட்டத்
தொகை பலகை யதுவாக வானமாதர்
தொட்டசைக்க நடுவிருந்து தொன்மைபோல
நகுதெல்லி மகாதனை கோண சீமாவின்
நரசிங்க வைரவரே ஆடீரூஞ்சல். 1

அயனுடனே அரியுமயல் வடந் தொட்டாட்ட
ஆறுமுகன் மடியணைந்தே யன்போ டாட்ட
வயக்கரிமா முகக்கடவுள் கனிவின் ஆட்ட
வந்தனைசெய் காளி மகிழ்வாகி யாட்ட
வியத்தகு மெம் வீரபத்ரவேள் பாங்காட்ட
மெந்துயர்தீர் விமலனொடு தாய் நின்றாட்ட
நயத்தகு சீர் தந்தருளுங் கோணசீமா
நரசிங்க வயிரவரே யாடீரூஞ்சல். 2

இந்திரனூர் வருணனியற் பனிநீர் வாசங்க
இயக்கனடை தரநிருதி பணிக்கம் தாங்க
சந்திரனூரிரவி வட்டம் தளர்ந்தே வீச
சதாகதி ருத்திரர் விசிறி கவரிவீச
மந்திரங்கள் மாமறைகள் வாழ்த்து மல்க
மறலியனல் வாள்சூலம் வாங்கிக் காக்க
நந்தலிலா வண்ண மருள் கோணூசீமா
நரசிங்க வயிரவரே யாடீரூஞ்சல். 3

கற்ற பெரும் பயனூகிக் கண்ணுமாகிக்
கற்பகத்தின் கனியாகிக் காதலாகி
நிற்குநிலை தானூகி நெஞ்சி னுள்ளே
நின்மலவா னந்தமுறு நிறைவு மாகி
பற்றற்ற பரவெளியாய்ப் பரந்து நின்று
பார்க்குமிடந் தொறும் விளங்கும் பரமேயாகும்
நற்றெல்லி மகாதனே கோணு சீமத்து
நரசிங்க வயிரவரே யாடீரூஞ்சல். 4

பரசிவன் தருமகனே பரிவினேடும்
பரகாளி மகிழ்ந்து நின்றுபார்வை செய்ய
அரகர வென்றடியார் பலர் அருகில் நின்று
அணிமலர்கள் பலசொரிந்து அகமே மல்க
புரந்தரனும் அயன்மாலும் புலவர் தாமும்
போற்றி செய்தே துதித்து மகிழ்வெய்துகின்ற
வரத்தெல்லி மகாதனே கோணு சீமாவின்
நரசிங்க வயிரவரே யாடீரூஞ்சல். 5

அந்தணர்கள் மறைபாட அவர்தந் தூய
வருமகளிர் பொற்கவரி யங்கை வீச
வந்தடியார் சங்கொலிப்ப முரசந் தன்னின்
ஒலிகூடி வண்ணஒலி விண்ணி லேற
தந்தை சிவன் தாயுமையாள் வந்துநின்று
தம்வடிவு காண சராசரங்க ளோங்க
நற் றெல்லி மகாதனேகோ ணுசீமாவின்
நரசிங்க வயிரவரே யாடீரூஞ்சல். 6

துடிமுழவு தண்ணுமைகள் துளங்கி யார்ப்ப
தூயவொலிக் கருவிகளும் துவன்றி யார்ப்ப
கடிமுரசம் மத்தளங்கள் கவர்ந்தே யார்ப்ப
கரம்பயிலெக் காளமது கதித்தே யார்ப்ப
நொடிசவரி குடவளையும் நுணுகி யார்ப்ப
நுடங்கு பலவித வொலிகள் நுவன்றே யார்ப்ப
அடிபரவிப் பணியவரான் கோணுசீமா
நரசிங்க வயிரவரே யாடீரூஞ்சல். 7

சயத் துர்க்கையொடு மறைசேர் மகளிராட
சராசரங்கள் தாழாமல் தழுவியாட
நியமத்தில் வழாதுயிர்கள் நேர்ந் தேயாட
நிலவு மிரண் டறமிருபால் நிலைத்தேயாட
மயக்கறவே வேத சிவாகமங் களாட
மனமெல்லா மானந்தம் மருவியாட
நயத்தெல்லி மகாதனை கோணு சீமாவின்
நரசிங்க வயிரவரே யாடீரூஞ்சல். 8

காளி வயிரவ காரி! யாடீரூஞ்சல்
கருங் குதிரை யாளி முத்த! யாடீரூஞ்சல்
ஞாளியனே! சூலதர! வாடீரூஞ்சல்
நலத் தமிழுக் குரியோனே! யாடீரூஞ்சல்
மீளி! விறற்பினை! சித்த! வாடீரூஞ்சல்
விழை பவளச் சடைவடுக யாடீரூஞ்சல்
ஆளி வளஞ்செறி கோணு சீமாமேய
நரசிங்க வயிரவரே யாடீரூஞ்சல். 9

வடை மாலை புனைபவனே! யாடீரூஞ்சல்
வாகைதர வருபவனே யாடீரூஞ்சல்
அடைகாய் தீம்பழவமுதம் ர்த்தா யூஞ்சல்
அதிரச மோதக முறுக்கு மமர்ந்தாங் ஊஞ்சல்
கிடையாத பொருள்பலவும் தருவா யூஞ்சல்
கேடடையா வகைகாக்கும் கிழவா ஊஞ்சல்
நடை யுயர்வே நல்கியிடுங் கோணுசீமா
நரசிங்க வைரவரே யாடீரூஞ்சல். 10

பலசெல்வக் கன்றினொடு பசுவும் வாழி!
பசியமா முகில் பொழிந்து பரவிவாழி!
நிலைத்து வேதாகமங்கள் நிலவிவாழி!
நிகழரசின் துறையனைத்தும் நெறியில் வாழி!
கலைத்திருவார் நாவலர்கள் கனிந்துவாழி!
கவின் மறையோர் மரபென்றும் கலந்துவாழி!
நலத்தெல்லி மகாதனை கோணு சீமாவின்
நரசிங்க வயிரவரே வாழி! வாழி! 11

உ

சிவமயம்

# உற்சவங்கள் பற்றிய விபரம்

1. 3-வது கும்பாபிஷேகம்

*இஃது அன்று இயங்கிவந்த திருப்பணி நிர்வாகத்தின் அநுசரணையுடன் 9 - 6 - 1985-ல் ஆதினகர்த்தருடைய தலைமையில் சிறந்த முறையில் நடாத்தப்பட்டது.*

2. அலங்கார உற்சவம்

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்குப் பன்னிரண்டு நாட்கள் அதற்குரிய உபயகாரர்களது உபயமாக நல்ல முறையில் நடாத்தப்பட்டது.

3. மணவாளக்கோல உற்சவம்

மூன்று ஆண்டுகளின் பின்னர் வைகாசி மாதத்தில் வரும் சதய நட்சத்திரத்திலன்று சங்காபிஷேகம், ஊஞ்சல் உற்சவம் என்பன அதற்குரிய உபயகாரர்களது உபயமாக நான்கு ஆண்டுகள் நடைபெற்றுள்ளன. தொடர்ந்தும் நடைபெறவுள்ளன.

4. நவராத்திரி

இது ஒன்பது தினங்கள் தேவி பூசையும், பத்தாம் நாள் வன்னி வாழை வெட்டுதலும், இடம் பெறும். பத்து உபயகாரர்கள் இந்த உபயத்தை நல்ல முறையில் கொண்டாடி வருகின்றனர்.

5. திருவெம்பாவை

பத்துத் தினங்கள் விசேட பூசைகளும் திருவெம்பாவை படித்தலும் இடம் பெறும். இறுதிநாள் ஊஞ்சல் உற்சவம் ஆகியவை நடைபெறும். இதனையும் பத்து உபயகாரர்கள் உபயமாகச் செய்து வருகிறார்கள்.

6. தைப்பொங்கல்

மேற்படி தினத்திலன்று அதற்குரிய உபயகாரரது செலவில் அபிஷேகம் ஆராதனை உற்சவம் என்பன இடம்பெற்று வருகின்றன.

7. தைப்பூசம்

தைப்பூசத்தினத்திலன்று அபிஷேகம் உற்சவம் ஆகியவை அதற்குரிய உபயகாரரது உபயமாகச் செவ்வனே கொண்டாடப்படும்.

8. வருடப்பிறப்பு

ஆண்டுதோறும் வருடப்பிறப்பிலன்று அபிஷேக ஆராதனைகள் உற்சவம் ஆகியவை சிறந்த முறையில் உபயகாரரது உபயமாக நடாத்தப்படும்.

9. சிவராத்திரி

இத் தினத்திலன்று நான்கு சாமமும் விசேட அபிடேக ஆராதனைகள் மிகச் சிறந்த முறையில் அதன் உபயகாரர்களால் செய்விக்கப்படும்.

10. விசாகப் பொங்கல் :

வைகாசி விசாக தினத்திலன்று அறுபது வருடங்களுக்கு மேலாகப் பொங்கல் நடைபெற்று வருகின்றது. இத் தினத்தில் பக்தர்கள் கூடுதலாக வந்து பொங்கல் செய்து மடை வழிபடுவார்கள். இதற்கென நியமிக்கப்பட்ட உபயகாரரது உபயமாக விசேட அபிடேக ஆராதனைகள், உற்ஸவம் என்பன இடம் பெறும்.

11. வன்னி வாழை வெட்டுதல் :

ஆண்டுதோறும் விஜயசதமியிலன்று எமது மகாதனை வயிரவர் ஆலயத்துக்குத் தெல்லிநகர் காசி விநாயகப் பெருமான் எழுந்தருளி வந்து வன்னி வழை வெட்டும் நிகழ்ச்சி ஏறக்குறைய ஐம்பது ஆண்டு காலமாக இடம்பெற்று வருகின்றது. பெரும் எண்ணிக்கையில் மக்கள் பங்குபற்றும் இந் நிகழ்ச்சியும் அதற்குரிய உபயகாரர்களால் சிறப்பாகச் செய்யப்படுகின்றது.

12, கூட்டுப் பிரார்த்தனை :

மேற்படி ஆலயத்தில் வெள்ளிக்கிழமை தோறும் கூட்டுப் பிரார்த்தனை இடம்பெற்று வருகின்றது. விசேட காலங்களிலும் கூட்டுப் பிரார்த்தனை நடாத்தப்பெறும்.

சைவப்பிரகாச அச்சகம் 450, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.